மேலும், ஏராளமான பில்கிரிம்ஸ் வந்து போவதால் பில்கிரிம் டாக்ஸ் போடலாம். அந்த முறையிலே வழிவகைகளை உண்டாக்க முடியும். ஆகவே, கான்ஸ்ட்டிட்யூட் பண்ணுவதற்கு பேன் ஆர்டர் தடையாக இருந்தாலும் அதற்கான நிலைமைகள் பற்றி ஆய்வு செய்வதற்குரிய வகையிலே மாண்புமிகு அமைச்சரவர்கள் பரிசீலனை செய்வார்களா ?

(முற்பகல் 9-50]

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, நாகப்பட்டிணத்தைப் பொறுத்த வரையில், நிதிநிலை சரியில்லை என்ற காரணத்தால், நேற்றுக்கூட 12 இலட்சம் ரூபாய் கொடுக்கப்பட்டிருக்கிறது. அப்படி 12 இலட்சம் ரூபாய் கொடுக்கப்பட்டிருந்தாலும், அங்கே குறை இருக்கிறது என்பதை மாண்புமிகு உமாநாத் அவர்கள் தெரிவிக்கிறார்கள். ஆனாலும், அவைகளை எல்லாம் பரிசீலனை செய்து, நகராட்சியை நகரியமாக ஆக்குவதற்கு என்னென்ன வழி முறைகள் தேவையோ அவைகள் எல்லாம் எடுத்துக்கொண்டு பரிசீலிக்கப்படும்.

நிலக்கோட்டை—காமுப்பிள்ளை சத்திரம் நெடுஞ்சாலையின் குறுக்கே ஓடும் ஓடைகளின்மீது பாலம் கட்டும் பணி

*வினா எண். 604— திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர், கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நிலக்கோட்டை தொகுதியில் நிலக்கோட்டை —காமுப் பிள்ளைச் சத்திரம் நெடுஞ்சாலையின் குறுக்கே உள்ள இரண்டு ஓடைகளால் மழைக் காலங்களில் பஸ் போக முடியாமல் மக்கள் கஷ்டப்படுவது அரசிற்குத் தெரியுமா?

(ஆ) ஆம் என்றால் அந்த ஓடைகளின் குறுக்கே பாலம் கட்டும் உத்தேசம் அரசிற்கு உண்டா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) மற்றும் (ஆ) வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள ஓடைகள் மீது பாலங்கள் கட்டும் பணி எந்தவித திட்டத்திலும் இடம் பெறவில்லை. இப்பணிகளை இனிவரும் ஆண்டுகளில் அரசின் நிதி நிலைமையைப் பொறுத்து மேற்கொள்வது பற்றி பரிசீலிக்கப்படும்.

திருமதி. ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது நீண்ட நெடுநாட்களாக இருந்து வரும் பிரச்னை. அங்கிருக்கும் டிபார்ட்மெண்ட் அதிகாரிகளை அணுகி கேட்டால் எஸ்டிமேட் போடப்பட்டு சேங்ஷனுக்கு அனுப்பப்பட்டி

ருக்கிறது. செங்ஷன் ஆகிவிட்டது, டெண்டர் கால்—பார் செய்யப் போகிறோம் என்றெல்லாம் சொல்கிறார்கள். இங்கே அமைச்சர் அவர்கள் பதில் கூறும்போது, எந்த திட்டத்திலும் இடம் பெறவில்லை என்று சொல்லுகிறார். ஒரு வேளை, தவறான தகவல்கள் ஏதாகிலும் டிபார்ட்மெண்டிலிருந்து அமைச்சருக்கு அனுப்பப்பட்டிருக்குமோ என்னவோ? உண்மை நிலை என்ன என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் போன்றவர்கள் கொடுக்கக்கூடிய கோரிக்கைகளின் அடிப்படையில் நாங்கள் சம்பந்தப்பட்ட துறைகளை புரோபோசல் அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறோம். அவர்கள் அவ்வாறே புரோபோசல் தயார் செய்து அனுப்பியிருக்கலாம். ஆனால் அப்படி அனுப்பியிருப்பதாலேயே அந்தத்திட்டங்கள் செயல்முறைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்று பொருள் அல்ல. நிதிநிலை சரியாக இருக்குமேயானால், எடுத்துக்கொள்ளலாம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட இரண்டு பாலங்களுக்கும் அவ்வாறே புரோபோசல்கள் வந்திருக்கின்றன. மொத்தம் 4 இலட்சம் ரூபாய் செலவாகும் என்று எஸ்ட்டிமேட் போடப்பட்டிருக்கிறது. ஆகவே, வருகிற காலத்தில் நிதிநிலை சரியானால், இந்தத் திட்டங்களை எடுத்துக்கொள்வது சம்பந்தமாக ஆலோசிக்கப்படும்.

திருமதி. ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள் வரும் ஆண்டிலே எடுத்துக்கொள்ளப்படும் என்ற அருமையான நல்ல அஷ்யூரன்ஸை கொடுத்திருக்கிறார்கள். அதை வைத்துப் பார்த்துக்கொள்ளலாம். இருந்தாலும் கூட இந்த நிலக்கோட்டைப் பகுதி தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் பணிகள் சிறப்பாக நடைபெற்றிருக்கக்கூடிய பகுதி. அப்படி பல வேலைகள் செய்யப் பெற்றிருக்கும்போது, இந்த வேலை அப்படியே நின்றுபோனால், நமது அரசுக்கு அது நல்லதா? 4 இலட்சம் ரூபாய் என்பது ஒன்றும் அப்படி அதிகமான தொகை அல்ல. ஆகவே, விரைவில் அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் வகையில் முயற்சிகளை அரசு மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிறபோது 4 லட்சம் ரூபாய் அப்படி ஒன்றும் அதிகம் இல்லை என்றார். அவரைப் பொறுத்தவரையில் 4 இலட்ச ரூபாய் என்பது குறைவாக இருக்கலாம். ஆனால், இந்த அரசைப் பொறுத்தவரையில் 4 லட்சம் ரூபாய் ஒரு யூனியனுக்குச் செலவு செய்யப்படுகிற தொகை, அதை ஒரு பகுதிக்கு மட்டுமே ஒதுக்குவதில் பல நிதிநிலை சங்கடங்கள் ஏற்படும். ஆகவே, இவைகளையெல்லாம் கருத்தில் கொண்டு அந்தத் திட்டங்களை உருவாக்குவது பற்றிய நடவடிக்கைகளை எடுக்கலாம்.

திரு. க. பாரமலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள் குறிப்பிடுகிற அந்தப் பாலங்கள், மிக செங்குத்தான மலைப்பகுதியின் அருகே உள்ள இடங்கள். அதிலே ஒரு முழங்கால் அளவு தண்ணீர் வந்தால் கூட, அந்த இடத்தைக் கடக்க முடியாது. விவசாயத்திற்குச் செல்கிற மக்கள் கூட, அப்படி தண்ணீர் வரும்காலத்தில், வீடு திரும்ப வேண்டும் என்றால், பல மணி நேரம் காத்திருந்து பிறகே செல்லக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, அந்த அவசியத்தைக் கருதி, துரிதமான நடவடிக்கை எடுத்து அந்தப் பாலத்தைக் கட்டுவதற்கு அரசு ஆணையிட முன் வருமா? என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே பதில் சொல்லிவிட்டேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க வினா எண்கள். 605, 606, 607, 608 ஆகியவை ஒத்திவைக்கப்படுகின்றன.

பேருந்துக் கட்டண உயர்வு.

*வினா எண் 609—திரு. கு. ரமணி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1980 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 1 ஆம் நாள் முதல் உயர்த்தப்பட்டுள்ள பஸ் கட்டண உயர்வு மிக அதிகமானது என்ற எதிர்ப்பு தமிழகமெங்கும் ஏற்பட்டுள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதைக் குறைக்க அரசு ஆலோசிக்குமா?

மாண்புமிகு திரு. ச. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகம் பூராவும் அதை எதிர்த்தது என்று சொல்ல முடியாது. சில இடங்களில் சுற்றுப் பயணம் செய்து பார்த்தபோது, கட்டணத்தை இப்படி திடீரென்று உயர்த்தியது தவறு. உயர்த்தியது பொதுவாக தவறு இல்லை என்றாலும், படிப்படியாக உயர்த்தியிருக்கலாம் என்ற அளவில் கருத்துக்கள் பொதுமக்களிடம் இருந்து பெறப்பட்டன. அதன் அடிப்படையில் தான் 1980 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 17 ஆம் நாள் முதல் கட்டணங்களைக் குறைத்திருக்கிறோம்.

திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பஸ் கட்டணம் உயர்ந்திருக்கிறது என்பதை இங்கேயும் எல்லாக் கட்சிகளும் எதிர்த்திருக்கின்றன. பொதுமக்களும்